# அளவியல்

துணை தலைப்பு : வட்டத்தின் பகுதிகள்

---

## பிரிவு 1:

**1.** கேள்வி சரியா அல்லது தவறா என்று கூறுக .

அ) ஒரு வட்டத்தின் நிலையான புள்ளியானது வட்ட மையம் எனப்படும். ☐

ஆ) ஒரு வட்ட மையத்தின் சமதொலைவு ஆனது விட்டம் எனப்படும். ☐

**2.** வட்டத்தின் மீதுள்ள ஏதேனும் இரு புள்ளிகளை இணைக்கும் கோட்டுத்துண்டு ____________ எனப்படும்.

அ) விட்டம்
ஆ) ஆரம்
இ) நாண்
ஈ) மேலே கொடுக்கப்பட்டுள்ள அனைத்தும்.

## பிரிவு 2 :

3. ஒரு அட்டையில் 5cm விட்டத்தில் ஒரு வட்டம் வரைந்து வெட்டவும், சுற்றளவில் ஒரு புள்ளியைக் குறிக்கவும். ஒரு எண் கோடு வரைந்து அந்த எண் கோட்டில் ஒரு முழு சுற்று சுற்றி அதன் சுற்றளவை அளக்கவும்.

**4.** கோடிட்ட இடங்களை நிரப்புக.

அ) வட்டத்தின் மையப்புள்ளி வழியே செல்லும் நாண் __________________ ஆகும்.

ஆ) ___________________ வட்டத்தின் மிகப்பெரிய நாண் ஆகும்.

## பிரிவு 3 :

கேள்விகளுக்கு சுருக்கமாக பதிலளிக்கவும்:

**5.** ஒரு வட்டத்தின் வட்டவில்லை ஒரு படத்துடன் விளக்குக.

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

*6*. வட்டக்கோணப்பகுதியை ஒரு படத்துடன் விளக்குக.

*7*. ஒரு வட்டத்தின் வட்டத்துண்டை ஒரு படத்துடன் விளக்குக.

***8.*** சோனா ஒரு ஆப்பம் சாப்பிட்டுக்கொண்டு இருந்தாள் ராஜு அதில் அவளிடம் ஒரு பங்கு கேட்டான். சோனா அதை இரண்டு துண்டுகளாக பியத்தாள். அவை ஒரு வட்டத்தின் சிறிய மற்றும் பெரிய வட்டதுண்டுகளைப் போல இருந்தன. அவை என்ன என்று விளக்கவும்.

## பிரிவு *4 :*

பின்வரும் கேள்விகளுக்கு விரிவாக பதிலளிக்கவும்:

***9.*** ஒரு வட்டத்தின் வட்டமையக் கோணத்தை, ஒரு படம் மற்றும் எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

***10.*** *10 ஒரே அளவு பகுதிகளைக் கொண்ட ஒரு வட்டத்தின் வட்ட மையக் கோணத்தைக் கணக்கிடுக. ஒரு படம் வரைந்து அதை விளக்குக.*